# IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,

# TENKASI.

**MCOP.No. 56/2022**

**நாள்– 29.01.2025**

**ம.சா.1 திருமதி. காசியம்மாள் –** சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் தற்போது மங்களாபுரத்தில் வசித்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன சுப்பையா எனது கணவர். எனது பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் படித்து வருகிறார்கள். எனது கணவர் பால் வியாபாரம் செய்து மாதம் ரூ.30,000 சம்பாதித்து வந்ததாக ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கிற்காக நான் அவ்வாறு பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. TN–76–AM–2919 பதிவெண் கொண்ட இருசக்கர வாகனம் எனது கணவருக்கு சொந்தமானது என்றால் சரிதான். அந்த வாகனத்தை ஓட்டுவதற்கு அவரிடம் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. அந்த ஓட்டுநர் உரிமத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கணவருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதாக நான் பொய்யாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

விபத்து மங்களாபுரம் சந்திப்பில் நடுரோட்டில் நடந்தது என்றால் சரியல்ல, ரோட்டின் ஓரமாக விபத்து நடந்தது. எனது கணவர் பால் வியாபாரத்திற்கு சென்றபோது, கிருஷ்ணமூர்த்தி என்ற நபருடன் பேசிக்கொண்டே கவனக்குறைவாக சென்றதால் தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் கவனமாக தான் வாகனத்தை ஓட்டிவந்தார் என்றும் எனது கணவர் தான் கவனக்குறைவாக விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்றால் சரியல்ல. உறுதிக்கூற்றில் 5ம் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள செலவினங்கள் குறித்து ஆவணம் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து நடந்த தேதியில் எனது கணவருக்கு 40 வயது என பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அதனை மெய்ப்பிக்கும் வகையில் நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது

கணவரின் பிரேத பரிசோதனை அறிக்கையில் அவரது வயது 41 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீட்டு தொகை மிகையானது என்றால் சரியல்ல. அதற்கு எந்த சட்ட அடிப்படையும் கிடையாது என்றும் எனது மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi